“வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்” என்றார் கம்பர் – கம்பர் கண்ட கனவாக வறுமையில்லாத –

# பொருளாதார வளர்ச்சி மிகுந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது!

## சென்னையில் – கம்பன் கழகத்தின் பொலிவுமிகு பொன்விழா நிறைவு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரையில் பெருமிதம்!

**சென்னை, ஆக.10–**

**“வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்” என்றார் கம்பர் – கம்பர் கண்ட கனவாக வறுமையில்லாத – பொருளாதார வளர்ச்சி மிகுந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது” என சென்னையில் – கம்பன் கழகத்தின் பொலிவுமிகு பொன்விழா நிறைவு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.8.2025) சென்னையில் நடைபெற்ற சென்னை கம்பன் கழகத்தின் பொலிவுமிகு பொன்விழா நிறைவு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:–

கம்பனுக்கு சடையப்ப வள்ளல் போல், கம்பன் கழகத்திற்கு நம்முடைய திராவிட ஆழ்வார் அருமைச் சகோதரர் ஜெகத்ரட்சகன் அவர்கள்.

அவர் இந்த விழாவிற்கான அழைப்பிதழை என்னிடம் வழங்கியபோது, என்னுடைய பெயருக்கு முன்னால், ‘நடையில் நின்றுயர் நாயகன்’ என்று அச்சிடப்பட்டிருந்தது.

“நடந்து நடந்து மக்களைச் சந்திப்பதால் இந்தப் பட்டம் கொடுக்கிறீர்களா” என்று நான் அவரிடம் கேட்டேன்.

### திராவிட ஆழ்வாரை கம்பன் வரியில் வாழ்த்துகிறேன்!

அவர் சிரித்துக்கொண்டே, “இது கம்பராமாயண வரி” என்று சொன்னார். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் காட்டிய வழியில் தமிழ்நாட்டின் உயர்வுக்கான பாதையில் நடக்கும் எனக்கு கம்பரின் வரிகளை கொடுத்த திராவிட ஆழ்வாரை, நானும் கம்பரின் வரிகளாலேயே வாழ்த்த விரும்புகிறேன்.

“சடையப்ப வள்ளல் நூற்றில் ஒருவரல்ல, ஆயிரத்தில் ஒருவர்’ என்று சொல்கிறார் கம்பர். அப்படி, நம்முடைய ஜெகத்ரட்சகன் அவர்களும் குணத்தில் ஆயிரத்தில் ஒருவர்தான்!

என்ன இது? ஸ்டாலினுக்கும் கம்பன் விழாவிற்கும் என்ன தொடர்பு? என்று யாரும் வியக்க வேண்டாம்.

1999இல் இதே அரங்கில், நீதியரசர் எம்.எம்.இஸ்மாயில் முன்னின்று நடத்திய கம்பன் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் பங்கேற்றார். அந்த மேடையில் ஜெகத்ரட்சகனும் இருந்தார். அதற்கும் முன்னால், 1969இல் பெரியவர் சா.கணேசன் காரைக்குடியில் நடத்திய கம்பன் விழாவிலும் முத்தமிழறிஞர் கலைஞர் பங்கேற்று பேசினார். அப்போது அவர் என்ன சொன்னார் என்றால், “இந்த விழாவிற்கு வந்த என்னை ஆச்சரியத்தோடு பார்க்காதீர்கள், என்னை அழைத்து வந்தவர்களை ஆச்சரியத்தோடு பாருங்கள்” என்று நகைச்சுவையாக சொன்னார்.

நானும் அப்படித்தான், கம்பரின் தமிழுக்காகவும் ஜெகத்ரட்சகனின் அன்புக்காகவும் இங்கு வந்திருக்கிறேன்.

### ‘கவிச்சக்கரவர்த்தி கம்பர்’ விருது பெற்ற கவிப்பேரரசுக்கு வாழ்த்து!

இந்தச் சென்னை கம்பன் கழகத்தின் பொலிவுமிகு பொன்விழா நிறைவாக, அறிஞர்கள் பலரும் விருதுகள் பெற்றிருக்கிறார்கள்.

ஆழ்வார்கள் ஆய்வு மையத்தின் ‘கவிச்சக்கரவர்த்தி கம்பர்’ விருதை நம்முடைய கவிப்பேரரசு வைரமுத்து பெற்றிருக்கிறார். அவருக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுகள்! வாழ்த்துகள்!

கம்பன் கழகம் வழங்கும் ‘இயற்றமிழ் அறிஞர்’ விருதைப் பெற்றிருக்கும் பேராசிரியர் ஞானசுந்தரம் அவர்களையும், கம்பன் அடிசூடி பழ.பழநியப்பன் அவர்களையும், முனைவர் சாரதா நம்பி ஆரூரன் அவர்களையும், சொல்வேந்தர் சுகிசிவம் அவர்களையும், கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்களையும் வாழ்த்துகிறேன்! பாராட்டுகிறேன்!

**இதுபோன்ற விழாக்கள் இலக்கியச் சுவையை பேசுவது மட்டுமல்லாமல், இன்றைய இளைய தலைமுறைக்கும் இலக்கியச் சுவையை ஊட்டும் வகையில் அமைய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.**

3 நாட்கள் நடக்கும் இந்த விழாவில் பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்ட மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகிறது.

இதுபோன்ற விழாக்கள் இலக்கியச் சுவையை பேசுவது மட்டுமல்லாமல், இன்றைய இளைய தலைமுறைக்கும் இலக்கியச் சுவையை ஊட்டும் வகையில் அமைய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

### கம்ப இராமாயணம் தமிழுக்காகப் பாராட்டப்பட்டது!

திராவிட இயக்கம், கம்ப இராமாயணத்தை மாறுபட்ட கோணத்தில் பார்த்த இயக்கம். சில கருத்துகளுக்காக விமர்சிக்கப்பட்டாலும், கவிதைக்காக, அதில் இருக்கும் தமிழுக்காக பாராட்டப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரான காலத்தில்தான் சென்னை கடற்கரையில் கவிச்சக்ரவர்த்தி கம்பருக்குச் சிலை வைக்கப்பட்டது. வடபுலத்தைச் சேர்ந்த வால்மீகி எழுதிய இராமாயணத்தை தமிழ் மண்ணின் மணம் மணக்க கம்பர் எழுதியது நமக்கு தெரியும்.

அயோத்தியின் பெருமையை சொல்லும் போது கூட, காவிரி நாட்டுடன் ஒப்பிட்டவர் கம்பர். இராமனை அவதாரமாக காட்டுவது வால்மீகியின் பார்வை. ஆனால், சக்ரவர்த்தியின் மகனாக தொடங்கி, கோசலை நாட்டு சக்ரவர்த்தியாக முடிப்பது கம்பரின் பார்வை. கதையில் வரும் அரசர்கள் பெயரை தமிழுக்கு மொழிபெயர்த்தவர் கம்பர்.

‘கம்பன் கண்ட சமரசம்’ என்ற புத்தகத்தை எழுதிய நீதியரசர் எம்.எம்.இஸ்மாயில் கம்பன் கழக விழாக்களைத் தொடர்ந்து நடத்தி, கம்பனின் தமிழில் சமூக ஒற்றுமையைக் கண்டார்.

“நதிகள் பலவாக ஓடி வந்தாலும் அது வந்து சேருவது கடல்தான், அதுபோல், வேறு வேறு கடவுள்கள் இருந்தாலும் நோக்கம் ஒன்றுதான்” என்ற பொருளில் கம்பர் பல பாடல்கள் பாடியிருக்கிறார்.

### கம்பன் கழக விழாவில் கலைஞர் ஆற்றிய உரை!

1989ஆம் ஆண்டு இதே கம்பன் கழக விழாவில் உரையாற்றிய தலைவர் கலைஞர் அவர்கள், “கம்பனின் கவிதைகளில் தீட்டிய கனவாம் வளம் கொழிக்கும் திருநாட்டை உருவாக்க உறுதியேற்போம்” என்று குறிப்பிட்டார்.

“வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்” என்று கம்பர் சொன்னார். அப்படி வறுமை இல்லாத மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. சமூக வளர்ச்சிக் குறியீடுகளில் முன்னணி மாநிலமாக இருக்கிறது. பொருளாதார வளர்ச்சி மிகுந்த மாநிலமாக இருக்கிறது. இதுதான் கம்பர் கண்ட கனவு.

இத்தகைய மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதும் கம்பருக்கு ஆற்றும் தொண்டுதான் என்று இங்கு கூடியிருக்கும் இலக்கிய ஆளுமைகள் எல்லோரும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

விருதுகள் பெற்ற எல்லோருக்கும் என்னுடைய வாழ்த்துகளை மீண்டும் சொல்லி, கம்பன் கழக விழாக்களை மிகச்சிறப்பாக நடத்தி வரும் திராவிட ஆழ்வார் ஜெகத்ரட்சகன் அவர்களையும் மனதார பாராட்டி விடை பெறுகிறேன்.

நீங்கள் உங்கள் பணியைத் தொடர்க!

நான் என் மக்கள் பணியை தொடர்கிறேன்! இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.8.2025) சென்னையில் நடைபெற்ற சென்னை கம்பன் கழகத்தின் பொலிவுமிகு பொன்விழா நிறைவு விழாவில், ஆழ்வார்கள் ஆய்வு மையத்தின் கவிச்சக்கரவர்த்தி கம்பர் விருதினை கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கும், இயற்றமிழ் அறிஞர் விருதுகளை பேராசிரியர் ஞானசுந்தரம், பழனியப்பன், பேராசிரியர் சாரதா நம்பி ஆரூரன், சுகி சிவம், இலங்கை ஜெயராஜ் ஆகியோருக்கும், கம்பன் கலைநயச் செல்வர் விருதினை திரைப்பட இயக்குநர் எஸ்.பி. முத்துராமன் அவர்களுக்கும், வழங்கி, சிறப்பித்தார். இந்த விழாவில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ. வேலு, பி.கே. சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், சென்னை கம்பன் கழகத்தின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர்கள் முனைவர் க. பொன்முடி, வி.ஜி. ராஜேந்திரன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் உள்ளிட்ட தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழ் அறிஞர்கள் மற்றும் சான்றோர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

---

சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் 100 மகளிருக்கு, 100 ஆட்டோக்கள்:

# மகளிர் பொருளாதார சுதந்திரம் பெற வேண்டும் என்பதே ‘திராவிட மாடல்’ அரசின் நோக்கம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, ஆக. 10 –**

**சென்னை, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதிக்குட்பட்ட ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில், 100 மகளிருக்கு, தலா ஒரு லட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய ஆட்டோக்களை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

அப்போது அவர் ``2023இல் 600, கடந்த ஆண்டில் 1,000 என மகளிர் மற்றும் திருநங்கைகளுக்கு ஆட்டோக்கள் வழங்கப்பட்ட நிலையில், இந்தாண்டு 1,000 ஆட்டோக்களை வழங்க, நம் முதலமைச்சர் அவர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளார்கள். அதன் ஒரு பகுதியாக, 100 மகளிருக்கு 100 ஆட்டோக்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்திப் பேசினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:

இன்றைக்கு தொழிலாளர் நலத்துறையின் சார்பாக, தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 100 மகளிருக்கு ஆட்டோ வழங்குகின்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கிட்டத்தட்ட 2 வருடங்களுக்கு முன்பு கொளத்தூர் தொகுதியில் நம் முதலமைச்சர் அவர்களின் தொகுதியில், அண்ணன் சி.வி.கணேசன் அவர்கள் ஏற்பாடு செய்து இதேபோல் 100 மகளிருக்கு இந்தத் துறையின் சார்பாக ஆட்டோக்கள் கொடுக்கப்பட்டன.

அன்றிலிருந்து, இன்றுவரை தொடர்ந்து அண்ணன் கணேசன் அவர்களிடம் கேட்டுக்கொண்டே இருந்தேன். என் தொகுதியில் ஆட்டோக்கள் கொடுக்க வேண்டும், எப்போது ஏற்பாடு செய்யப்போகிறீர்கள் என்று தொடர்ந்து 2 வருடமாக கேட்டு வந்தேன். அதன் தொடர்ச்சியாக, இன்றைக்கு இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார். அதற்கு இந்த நேரத்தில் அண்ணன் கணேசன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### குடும்பத்தில் ஒருவன்

அவர் இங்கு பேசும்போது என்மீது உள்ள அன்பால் என்னை ஒவ்வொரு முறை அழைக்கும்போதும் அண்ணன் உதயநிதி, அண்ணன் உதயநிதி என்று பேசினார். ஆனால், அவர் என்னைவிட பொதுவாழ்விலும், வயதிலும் மூத்தவர். எனவே, அவருக்கு என்றுமே நான் ஒரு நல்ல தம்பியாக, அவர் குடும்பத்தில் ஒருவனாக இருப்பேன் என்பதை கூறிக்கொள்கிறேன். இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்து, எங்களின் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி மகளிருக்கு ஆட்டோக்கள் வழங்கும் இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்கு சட்டமன்ற உறுப்பினராக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தொழிலாளர் நலன் காப்பதில், நம் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி, முதல் மாநிலமாக திகழ்ந்து வருகிறது. கலைஞர் அவர்களால் அமைப்புசாரா தொழிலாளர்களுக்குத் தனித்தனி நலவாரியங்கள் உருவாக்கப்பட்டன.

### தொழிலாளர் நல வாரியம்

தற்போது தொழிலாளர் நலத்துறையின் சார்பாக 20 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் இன்றைக்கு மிகச்சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. ஆண்களுக்கு நிகராக பெண்களும் முன்னேற வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்களது தலைமையிலான நம் திராவிட மாடல் அரசு ஏராளமான திட்டங்களைக் கொடுத்து வருகிறது. அதை உறுதி செய்கின்ற வகையில்தான், இந்த நிகழ்ச்சி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக, தமிழ்நாட்டின் மகளிர் பொருளாதார சுதந்திரம் பெற வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து செய்து கொண்டு இருக்கிறது.

மகளிரின் விடியல் பயணம் திட்டம், புதுமைப்பெண் திட்டம், காலை உணவு திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்று மகளிருக்கான முன்னேற்றத்திற்காக நம் முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை உருவாக்கி கொடுத்துக்கொண்டு இருக்கிறார். அந்த வகையில்தான், தொழிலாளர் நலத்துறையின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் ஆட்டோக்கள் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

### எனக்கு கூடுதல் மகிழ்ச்சி

கடந்த 2023ஆம் ஆண்டு 600 ஆட்டோக்கள் கொடுக்கப்பட்டன. அதைத்தொடர்ந்து கடந்த வருடம் 1,000 ஆட்டோக்களை கொடுத்தோம். இந்த வருடம் முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு 1,000 ஆட்டோக்கள் கொடுக்க வேண்டும் என்று இலக்கு கொடுத்துள்ளார்கள். அதன் ஒரு பகுதியாகத்தான் இன்றைக்கு 100 மகளிருக்கு ஆட்டோக்களை வழங்கி இருக்கிறோம். இதில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சி என்னவென்றால் எனது சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியைச் சேர்ந்த 62 மகளிர் இங்கே ஆட்டோக்களை வாங்க வந்துள்ளீர்கள். இந்த ஆட்டோக்களைப் பெறும் ஒவ்வொரு மகளிருக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் மானியமாக நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.8.2025) இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள 100 பெண்கள் மற்றும் திருநங்கை ஓட்டுநர்களுக்கு தலா 1.00 லட்சம் ரூபாய் மானியத்துடன் புதிய ஆட்டோ வாகனங்களை வழங்கினார். இந்நிகழ்வில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் கொ.வீர ராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் சி.அ.ராமன், மாநகராட்சி ஆளுங்கட்சி துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மாமன்ற உறுப்பினர் திருமதி ஈஸ்வரி வெங்கடேசன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

இன்றைக்கு இந்தியாவிலேயே மகளிரை, திருநங்கையரை ஆட்டோ ஓட்டுநர்களாக்க பயிற்சி கொடுத்து, நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்து, அவர்களுக்கு மானியத்துடன் ஆட்டோ கொடுக்கின்ற ஒரே மாநிலம் நம் தமிழ்நாடு என்பதில் நமக்கெல்லாம் மிகப்பெரிய பெருமை.

### நீங்கள்தான் முன்மாதிரி

இங்கு ஆட்டோக்களைப் பெற்றுள்ள ஒவ்வொரு சகோதரியையும் பார்க்கும் போது தன்னம்பிக்கையும், விடா முயற்சியும்தான் எனது கண்களுக்குத் தெரிகிறது. உங்களைப் பார்க்கும்போது வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று நினைக்கும், ஒவ்வொரு மகளிருக்கும் நீங்கள் முன்மாதிரியாக திகழ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆட்டோக்களைப் பெற்றுள்ள உங்களின் எதிர்காலம் சிறக்கட்டும். உங்கள் குடும்பங்களில் மகிழ்ச்சி என்றும் நிலைக்கட்டும். நீங்கள் ஆட்டோக்களை பாதுகாப்பாக ஓட்டுவீர்கள் என்று நம்புகிறேன். உங்களின் முன்னேற்றத்திற்கு எல்லா வகையிலும் நம் அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் என்றென்றும் துணை நிற்பார்.

எனவே, இங்கு ஆட்டோக்களைப் பெற்றுள்ள ஒவ்வொரு மகளிருக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, அண்ணன் கணேசன் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் சி.வி.கணேசன், மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, துணை மேயர் மகேஷ்குமார், துறையின் செயலாளர் வீரராகவராவ், தொழிலாளர் நல ஆணையர் ராமன், மதன்மோகன், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி., ஈஸ்வரி வெங்கடேசன் எம்.சி. உள்பட பலரும் கலந்துகொண்டனர்.